மறைமுக சக்தி

# ஆசியின் வலிமை!

**கேள்வியாளர்:**

சத்குரு... அன்பர்களின் ருத்திராட்சங்களை நீங்கள் ஆசீர்வதிப்பதைப் பார்த்திருக்கிறேன். 'ஆசீர்வாதம்' என்றால் உண்மையில் என்ன?

**சத்குரு:**

'எல்லாம் நல்லதே நடக்கட்டும்!' என்று உங்களிடம் யாரேனும் சொன்னால், அது 'ஆசீர்வாதம்' கிடையாது. அது ஒரு விருப்பம், நல்ல எண்ணம்... அவ்வளவுதான்! 'ஆசி' என்பது எண்ணங்கள் அல்ல... அது ஒரு குறிப்பிட்ட அளவிலான சக்தி.

உதாரணத்துக்கு... உங்கள் காரில் எரிபொருள் இல்லை. காரைத் தள்ளிக்கொண்டு போவது மிகவும் கடினம். அதோடு தாமதம் வேறு ஆகும். இதுவே யாரேனும் எரிபொருள் தந்து உதவினால், வெகு சுலபமாக... விரைவாக வேண்டிய இடத்துக்குச் சென்றுவிடலாம்.

'ஆசி' என்பது இந்த எரிவாயு போன்றது. அது வெறும் வாழ்த்தோ, எண்ணமோ, உணர்ச்சியோ அல்ல. உண்மையில் அது சக்தி! ஆனால், நீங்கள் எங்கேனும் செல்ல நினைத்தால்தான் உங்களுக்கு எரிபொருள் தேவை. பயணிக்க விருப்பம் இல்லையெனில்... எரிபொருள் தேவையில்லையே!

பயணிக்க விருப்பம் இல்லாதவர்கள் உலகில் இருக்கிறார்களா என்ன? ஆம்... 'பயணம்' என்றால், வாகனம் நகர வேண்டும். அது நகர்ந்தால், விபத்து நிகழ வாய்ப்பு இருக்கிறதே! இது எப்போதுமே ஆபத்தானது. அப்படிப் பார்த்தால் பயணிக்காமல் நிற்கும் வாகனத்திலேயே வாழ்வது பாதுகாப்பானதுதானே?

பயணம் செய்யவில்லை என்றால் மாற்றமே இருக்காது என்றல்ல! உங்களைச் சுற்றி, காலை... இரவாகும். இரவு... பகலாகும். மழைக்காலம் மாறி குளிர்காலம் வரும். குளிர்காலம் மாறி கோடை வரும். பின்னர் வசந்த காலம், இலையுதிர் காலம் என மாறிக்கொண்டே இருக்கும்.









சுற்றம் மாறுவதால், நீங்களும் எங்கோ பயணிப்பதாய் தோன்றலாம். அந்த எண்ணம் மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால், நிச்சயம் நீங்கள் பயணிக்கவும் இல்லை... உங்களில் எவ்வித மாற்றமும் நிகழவில்லை.

நிறுத்தப்பட்டுள்ள காரின் பாதுகாப்பு வேண்டாம். பயணிக்க வேண்டும் என்ற துடிப்புடன் இருந்தால், இப்போது உங்களுக்கு எரிபொருள் தேவைப்படும். இந்த எரிபொருள்தான் 'ஆசி'. அது தேடி வரும்போது பலரும் துரதிர்ஷ்டவசமாக அதை ஏற்க மறுத்துவிடுகிறார்கள். 'ஆசி' இப்படித்தான் இருக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அது அப்படி இருக்க வேண்டும் என்று அவசியமில்லை!

இது... குளிர்காலத்தில், அமெரிக்காவில் நடந்த நிகழ்ச்சி. மிச்சிகன் நகரில் ஒரு சிறிய பறவை பனிப்பொழிவை மிகவும் மகிழ்ச்சியுடன் அனுபவித்தது. அதனால் அது பருவ மாற்றத்துக்கு ஏற்ப, குறிப்பிட்ட காலத்தில், தெற்கு நோக்கி பயணம் செய்வதை மறந்தே போய்விட்டது.

பிறகு, தாமதத்துடன் கடுங்குளிரில் அங்கிருந்து புறப்பட்டது. ஆனால், வழியில்... குளிரில் விறைத்துப் போய் கீழே விழுந்துவிட்டது.

அவ்வழியே நடந்து போன பசு, சாணம் போட்டுச் சென்றது. அந்தச் சாணம் நேராக பறவை மீது விழுந்தது. சாணத்தின் கதகதப்பால் அது கடுங்குளிரில் இருந்து மீண்டது. மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தது. 'கீச்கீச்'சென்று கத்தத் தொடங்கியது.

குளிர்விட்டுப் போன மகிழ்ச்சியில் அது கத்திக்கொண்டிருந்தபோது, அங்கு ஒரு பூனை வந்து சேர்ந்தது. பறவையின் சப்தத்தைக் கேட்டதும் சுற்றும் முற்றும் பார்த்தது. 'ஓ... சாணத்துக்குள் இருந்து அல்லவா சப்தம் வருகிறது!' என்று புரிந்து, அதற்குள் இருந்த பறவையை வெளியில் இழுத்து அதனைத் தின்றது.

இதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்கள் மீது சாணம் எறிபவர்கள் எல்லாம் எதிரியாக இருக்க வேண்டும் என்று அவசியமும் இல்லை. சாணக் குவியலில் இருந்து உங்களை வெளியே எடுப்பவர்கள் எல்லாம் உங்களின் நண்பராக இருக்க வேண்டும் என்றும் அவசியமில்லை!

'ஆசி'கள் பல விதங்களில் வரும். நீங்கள் விரும்பியவாறுதான் அது வர வேண்டும் என்று அவசியம் இல்லை. உங்களுக்கு எந்த அளவுக்கு ஏமாற்றம் தருகிறதோ... அந்த அளவுக்கே அது உங்களுக்கு நல்லதைத் தரும். இது... 'ஆசி' என்று நீங்கள் நினைக்காத விதங்களில் கிடைக்கும் 'ஆசி'. உங்களுக்குப் பல நன்மைகளையும் செய்யும்.

'ஆசி' என்பது நல்லதும் அல்ல; கெட்டதும் அல்ல! சக்திமிக்க எரிபொருள். உங்கள் வளர்ச்சியை துரிதப்படுத்திக்கொள்ள உங்களுக்கு உதவும் வஸ்து அது!!

**தேவையற்ற...**
சிலரை மறந்துவிடுங்கள்;
சிலரை மன்னித்துவிடுங்கள்;
சிலரை கடந்துவிடுங்கள்;
சிலரை வெறுத்துவிடுங்கள்!
எவரையும் தேவையின்றி
தோளிலும், மனத்திலும்
தூக்கிச் சுமக்காதீர்கள்;
தவறினால்... உங்கள்
வாழ்க்கை சுமையாகிவிடும்!

சிலரிடம் பேசினால் நிம்மதி;
சிலரிடம் பேசாமல் இருந்தால் நிம்மதி!